பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 23 வியாழக்கிழமை 12.12.2024 | அதிர்வு 133

## யாழில் கைதி ஒருவர் மயங்கி வீழ்ந்து சாவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்குச் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அழைத்துவரப்பட்ட சிறைக் கைதி 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# வடக்கில் பரவுவது எலிக்காய்ச்சலே!

## உயிரிழந்தவர்களின் மாதிரிகள் பலவற்றில் உறுதி

வடக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்படாத காய்ச்சலால் உயிரிழந்த 7 பேரிடம் பெறப்பட்ட இரத்த மாதிரிகள் பலவற்றில் எலிக்காய்ச்சலுக்கான லெப்டோஸ்பிரோசிஸ் வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவு அறிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் இரத்த மாதிரி மற்றும் சிறுநீரக மாதிரி என்பன தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

இந்நிலையில், உயிரிழந்தவர்களின் மாதிரிகள் பலவற்றில் எலிக்காய்ச்சலுக்கான லெப்டோஸ் பிரோசிஸ் வைரஸ் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் துஷானி தபரேரா தெரிவித்துள்ளார். 04

### நீதியரசர் நியமன விவகாரம்:

## அரசமைப்புக் கவுன்ஸிலின் முடிவை அங்கீகரித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பு

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் பந்துல கருணாரத்னவை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்குப் பரிந்துரைத்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய சிபாரிசை முன்னைய அரசமைப்பு கவுன்ஸில் நிராகரித்தமை சட்ட ரீதியானது என உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்து இருக்கின்றது.




நீதியரசர்கள் பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்த்தன ஆகியோரை கொண்ட ஆயம் இன்று காலை இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. 04

## தேசியப் பட்டியல் எம்.பியானார் மனோ கணேசன்



ஐக்கிய மக்கள் சக்தியின் ஏனைய 4 தேசியப் பட்டியல் நாடாளுமன்ற ஆசனங்களுக்கான பெயர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 04

# நோயாளர்கள் நலன் கருதி மந்திகை வைத்தியசாலையில் புதிய மருத்துவ சிகிச்சை அலகை ஆரம்பிக்க நடவடிக்கை



எலிக்காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோயாளர்களின் நலன் கருதி பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் புதிய மருத்துவ சிகிச்சை அலகை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது அதிகரித்து வரும் எலிக்காய்ச்சல் தொற்று நோய் காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

நோயாளர்கள், விடுதிகளின் கட்டில்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் காணப்படுவதால் தரையில் இருந்து சிகிச்சை பெறும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டமையால் டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சல் தாக்கத்துடன் தற்போது புதிதாக எலிக்காய்ச்சல் என மூன்று வகை நோய்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அந்தவகையில் எலிக்காய்ச்சலின் தாக்கத்தால் இதுவரை ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

இதன்காரணமாக இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்த தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா, வைத்தியசாலையின் நிலைமைகளை நேரில் ஆராய்ந்ததுடன் விடுதிகளில் தங்கி இருந்த நோயாளர்களையும் பார்வையிட்டார் .

குறிப்பாக மருத்துவ சிகிச்சைப் பிரிவில் எலிக்காய்ச்சலின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் அங்கு மருத்துவ சிகிச்சை விடுதிகளில் கட்டில்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாகக் காணப்படுவதையும், அவர்கள் தரையில் இருந்து சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதனையும் காணக்கூடியதாக இருந்தது.

எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜா, உடனடியாக வைத்தியசாலையின் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி புதிய மருத்துவ சிகிச்சைப் பிரிவு அலகு ஒன்றினை உடனடியாக உருவாக்கி அதனுடாக நோயாளர்களுக்குச் சிகிச்சையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் வை.திவாகரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜாவுக்கு எடுத்துரைக்கையில் புதிய அலகொன்றை ஆரம்பிப்பதற்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது என்றும், அதனை நிவர்த்தி செய்து தரும் பட்சத்தில் புதிய அலகைத் திறக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

இதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஶ்ரீபவானந்தராஜா, யாழ்ப்பாணம் போதனா வைத்திசாலை நிர்வாகத்தினருடன் உடனடியாகக் கலந்துரையாடலில் ஈடுபட்டு அதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுத்தார்.

குறிப்பாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் மற்றும் தாதியர்களின் பற்றாக்குறையை தற்காலிகமாக நிவர்த்தி செய்து தருவதாக அவர் உறுதியளித்ததன் பிரகாரம் புதிய மருத்துவ சிகிச்சை அலகை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

மேலும், இந்த நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் மேலும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் வை. திவாகரன் மற்றும் வைத்திய அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உடனடியாக கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடி எலிக்காய்ச்சலின் நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையையும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அத்துடன் தற்போது யாழ்ப்பாணத்தில் பரவி வரும் எலிக்காய்ச்சல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக விசேட வைத்திய நிபுணர் குழு ஒன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது.



# வவுனியாவில் மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு ஊர்வலம்

(கி.வசந்தன்)

இயலாமையுடன் கூடிய நபர் களுக்கான சர்வதேச தினமான இன்று மாற்றுத்திறனாளிகளால் வவுனியா வில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




'உள்வாங்கல் மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக இயலாமை யுடையவர்களின் தலைமைத்து வத்தை விரிவுபடுத்தல்' எனும் தொனிப் பொருளில் வவுனியா புதிய பஸ் நிலை யத்திற்கு முன்பாக ஆரம்பமான ஊர்வலம் வைத்தியசாலை சுற்று வட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா நகர சபை கலாசாரமண்ட பத்தை அடைந்தது. ஏனைய நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றன.

ஊர்வலத்தில் ஈடுபட்டவர்கள், "நம் பிக்கை மனதில் உண்டு நம்பிக்கை கொடுங்கள், தொழில் உரிமை அனை வருக்கும் உண்டு, திறமைக்கு இயலாத மைகள் அல்ல போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந் தனர்.

இந்த நிகழ்வை வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் ஓஹான் நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது.











# யாழ்ப்பாணத்தில் கூரைமேல் சோலர் அனுமதியில் முறைகேடு நடந்தது உறுதி

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் சோலர் அனுமதி வழங்கல் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணம் பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகம் தவறிழைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட பாவனையாளருக்கு உடனடியாக நீதி வழங்குமாறும் பணித்திருக்கின்றது.

மேலும், பாவனையாளர் ஒருவருக்கு இணைப்பு அனுமதி வழங்குவதற்காகப் பாவனையாளரிடமிருந்து பணம் அறவிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படும் உள்ளக சுற்று நிருபங்கள் அல்லது பொது நடைமுறைகள் மற்றும் ஆவணங்கள் ஏதுமிருப்பின் அது பற்றித் தங்களுக்கு அறியத்தருமாறும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பாவனையாளர் விவகாரங்களுக்கான பணிப்பாளர் யசந்த ரதுவிதான இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் – சுன்னாகம் வாரியப்புலம் பகுதியைச் சேர்ந்த மின் பாவனையாளர் ஒருவர் 2023 ஆண்டு விண்ணப்பித்தபோது, அவருக்கு அனுமதி வழங்காமல், 2024 ஆம் ஆண்டு விண்ணப்பித்த அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்குச் செல்வாக்கின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத கட்டடத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, அவருக்கு அனுமதியை வழங்குமாறு பணிக்கப்பட்ட பின்னரும், இணைப்புக்காக ரூபா 11 இலட்சம் செலுத்துமாறு கோரியமையை ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்ததை அடுத்தே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளருக்கு இவ்வாறு பணித்திருக்கின்றது.

சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தில் சோலர் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களில் பலருக்கு அனுமதி வழங்கப்படாமை, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர் பொருத்துவதில் பாரபட்சம் காட்டுதல் போன்ற முறைகேடுகள் குறித்து இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கும், மின் சக்தி வலு அமைச்சுக்கும், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இது வரை பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

எனினும், இலங்கை மின்சார சபை அவற்றைக் கண்டும் காணாமல், முறையற்ற விதத்தில் பல அனுமதிகள் வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்தக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அனுமதியை வழங்குமாறு உத்தரவிடப்பட்ட போதும், பிராந்திய மின் பொறியியலாளர் அவை குறித்துக் கிஞ்சித்தும் கவனமெடுக்காமல் தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் சோலர் அனுமதிகளை வழங்கி வந்துள்ளார்.

அதைவிட, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர்களைப் பொருத்துவதிலும் முறைகேடாக நடந்து கொண்டுள்ளார் என்று பாவனையாளர்கள் பலர் முறைப்பாடு செய்துமிருந்தனர்.

இதேநேரம் – இணைப்புக்கான அனுமதி வழங்கல் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மின்வலுசக்தி அமைச்சரிடம் நேற்று நேரடியாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அனுமதிக்கு விண்ணப்பித்த ஒழுங்கு, அனுமதிக்காகப் பணம் செலுத்திய ஒழுங்கு, அனுமதி வழங்கப்பட்ட ஒழுங்கு உட்பட முறைகேடுகள் நடந்துள்ளன என்பதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்களை இலங்கை மின்சார சபையிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக வாடிக்கையாளர்கள் பலர் கேட்டிருந்த போதிலும், இதுவரை அத்தகைய தகவல்கள் எவையும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### அரசமைப்பு...

மேற்படி உயர் நீதிமன்ற நீதியரசர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸில் நிராகரித்தமை தவறென உத்தரவிடக் கோரி வியாங்கொடையைச் சேர்ந்த மஹிபுத்திர பத்திரன என்பவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரித்து உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

அது மாத்திரமில்லாமல், வழக்குச் செலவாக அரசுக்கு ஐந்து இலட்சம் ரூபாவுடன் அரசமைப்புக் கவுன்ஸிலின் மூன்று சிவில் பிரதிநிதிகளுக்கும் தலா 5 இலட்சம் ரூபாவும் என்ற அடிப்படையில் மொத்தம் 20 இலட்சம் ரூபாவை செலுத்தும்படியும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

இந்த வழக்கில் அரசமைப்புக் கவுன்ஸிலின் பிரதிநிதிகளான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோருக்குச் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், அரசமைப்பு கவுன்ஸிலின் மூன்று சிவில் பிரதிநிதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனக.ஈஸ்வரனும் முன்னிலையாகி பிரதான வாதங்களைச் சமர்ப்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேசியப் பட்டியல்...

அதன்படி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிஸாம் காரியப்பர், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சுஜீவ சேனசிங்க மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் மொஹமட் இஸ்மாயில் முத்து மொஹமட் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேசியப் பட்டியல் உறுப்பினராக இதற்கு முன்னர் பெயரிடப்பட்டிருந்தார்.

### யாழில் கைதி...

ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் இன்று காலை வழக்கொன்றுக்காக அழைத்துவரப்பட்டவரே மேற்படி கைதி உயிரிழந்தார்.

நாவற்குழி, ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த 40 வயதான இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தக் கைதி பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தொடர்பு பட்டவர் என பொலிசார் மற்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னர் உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வடக்கில் பரவுவது...

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பரவி வரும் இந்த எலிக்காய்ச்சல் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறு தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.



# யாழ். மாவட்டத்தில் வெள்ளி, ஞாயிறுகளில் தனியார் வகுப்புக்களை நடத்த வேண்டாம்!

## ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு மாவட்ட செயலர் அறிவுறுத்து



யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களில் தரம் 9 இற்குக் கீழான வகுப்புக்களை பிரதி வெள்ளிக் கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நிறுத்துமாறு கல்வி நிறுவன நிர்வாகிகளிடம் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலர் தலைமையில் நேற்று புதன்கிழமை மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட செயலரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு அறிவுறுத்தல்கள் உரிய தரப்புகளுக்கு வழங்கப்பட்டன.

1. பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி மாலை வேளையில் பயணிக்கும் யாழ்ப்பாணம் – உசன் வரையான இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையை கெற்பேலி வரையில் நீடிப்பு செய்யுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கு யாழ். மாவட்ட செயலர் அறிவுறுத்தினார்.

2. மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் மற்றும் மீளிணைப்பு செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்த அது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மாவட்ட செயலர் அறிவுறுத்தல் வழங்கினார்.

3. முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தனியார் கல்வி நிறுவனங்கள் தரம் 9 இற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளை வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்திலும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுமையாகவும் மாணவர்களின் இணை பாடவிதானச் செயற்பாடுகளுக்காகக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதை நிறுத்த தனியார் கல்வி நிறுவனங்கள் ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட செயலர் கேட்டுக்கொண்டதுடன், இது தொடர்பில் பிரதேச செயலாளர்களை உரிய கல்வி நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும், போதைப்பொருள் பாவனை தொடர்பாகவும் மற்றும் மாவட்ட ரீதியாக கிடைக்கப் பெற்ற 21 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், உதவி மாவட்ட செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆளும் தரப்பின் இக்கட்டு

சபாநாயகர் அசோக ரன்வல தம்மை 'கலாநிதி' எனப் பிரகடனப்படுத்திய விடயத்தை வைத்து புதிய அரசுக்கு - ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு - அதிக பட்ச அரசியல் நெருக்கடியைக் கொடுக்க எதிர்க்கட்சிகள் முழு முனைப்புடன் செயற்படுகின்றன - துடியாய்த் துடிக்கின்றன - என்று தெரிகின்றது.

இந்த விடயத்துக்காக சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு எதிராக எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பரிசீலித்து வருவதாக அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றக் குழு இன்று (வியாழக்கிழமை) கூடி இந்த விவகாரம் குறித்து விவாதிக்க உள்ளது. அப்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது தொடர்பாக பரிசீலிக்கப்படும்" என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

சபாநாயகர் அசோக ரன்வல போலியாக கலாநிதி பட்டத்தைப் பயன்படுத்துகின்றார் என முறைப்பாடு எழுந்ததையடுத்து சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

தாம் சட்டபூர்வமான கலாநிதி பட்டம் பெற்றவரா என்பது குறித்து சபாநாயகர் பொறுப்புணர்வுடன் அறிக்கை வெளியிட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

"அவரால் தமது கலாநிதி பட்டத் தகைமைக்கான ஆதாரத்தை வழங்க முடியாவிட்டால் - அதன் பின்னரும் அவர் பதவி விலக மறுத்தால் - ஐக்கிய மக்கள் சக்தி அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்நகர்த்திக் கொண்டு செல்லும்" என்று அஜித் பெரேர. எம்.பி. கூறினார்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் தற்போதைய சபாநாயகரை எதிர்க்கட்சிகளினால் பதவி விலக்க அல்லது இழக்கச் செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியே. அது சாத்தியமற்ற விடயமே.

மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் மிகப் பலமாக இருக்கும் ஆளும் கட்சியின் தெரிவான இந்த சபாநாயகரை சிறிய எண்ணிக்கையிலான எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஒன்றிணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் வீழ்த்துவது என்பது இன்றைய நிலையில் நினைத்துப் பார்க்க முடியாத விடயம்தான்.

ஆனால் அந்த நகர்வு மூலம் - நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் - ஆளும் தரப்புக்கும் சபாநாயகருக்கும் அரசியல் ரீதியாக பலத்த பின்னடைவையும் அழுத்தத்தையும் நெருக்கடியையும் எதிரணியினால் கொடுக்க முடியும்.

சபாநாயகர் பதவியில் அமர்ந்திருப்பவரின் தகுதி நிலை, கண்ணியம், மதிப்பு, கீர்த்தி, புகழ் போன்றவற்றையும் புதிய அரசின் மதிப்பையும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது மோசமாக எதிர்க்கட்சிகளினால் சிதறடிக்க முடியும் என்பது இதில் சூட்சமமாக பொதிந்துள்ள விடயமாகும்.


பொறுப்புக் கூறல், வெளிப்படைத் தன்மையான ஆட்சி முறைமை, மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துதல் போன்ற விடயங்களை பிரசார ஆயுதமாக பயன்படுத்தி, ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய ஜே.வி.பி. உட்பட்ட ஐக்கிய மக்கள் சக்திக்கும் அதன் அரசுக்கும் எதிராக பெரும் அரசியல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான மேடையையும் களத்தையும் நாடாளுமன்றத்தில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வாய்ப்பாக தரும் என்பதனால் அந்தத் தளத்தை பயன்படுத்த எதிர்க்கட்சிகள் தீவிரமாக முனைகின்றன.


புதிதாக அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி, அதன் செல்வாக்கை விழுத்துவதில் எதிர்க்கட்சிகள் ஆரம்பம் முதலில் முழு முனைப்புடனும் முஸ்தீபுடனும் இருக்கின்றன என்பதை இந்த விடயத்தை அவை கையாளும் போக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

சபாநாயகர் அசோக ரன்வல விடயத்தில் எதிர்க்கட்சிகளின் அழுத்தத்துக்கு ஆளும்தரப்பு இயைந்து இணங்கிப் போனால், அது எதிரணிக்கு பெரும் அரசியல் வெற்றியாக மாறிவிடும்.

அதே நேரம் எதிரணியின் அழுத்தத்துக்கு மடங்கி போகாமல், சபாநாயகர் விடயத்தில் உறுதியான - வெளிப்படையான - மக்களுக்கு திருப்தி தரக்கூடிய - நடவடிக்கையை எடுப்பதற்கு ஆளும் தரப்பு பின்வாங்குமானால் அது அரசியல் ரீதியாக அத்தரப்புக்கு பெரும் பின்னடைவை தந்துவிடும்.

எப்படிப் பார்த்தாலும் இது ஆளும் தரப்புக்கு நெருக்கடி தருகின்ற - தவிர்க்க முடியாத - இக்கட்டு நிலைமை தான்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# ஆண்டான்குளம் கிராமத்தின் குறைபாடு குறித்து ஆராய்வு!

## ரவிகரன் எம்.பி. நேரில் விஜயம்

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தமிழர்களின் பூர்வீகக் கிராமமான ஆண்டான் குளம் கிராமத்தின் குறைபாடுகள் தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று கேட்டறிந்தார். ஆண்டான் குளம் ஆதி ஐயனார் ஆலயத்தில் வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தார்.

ஆண்டான்குளம் கிராமத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984 ஆம் அங்கிருந்து இடம்பெயர்ந்த நிலையில், தற்போதுவரையில் அவர்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை. இருப்பினும் அங்குள்ள தமது விவசாய நிலங்களில் தமிழ் மக்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கால்நடைவளர்ப்பு, நன்னீர் மீன்பிடி போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

அந்தவகையில் குறித்த பகுதி விவசாய, கால்நடை வளர்ப்பு, நன்னீர் மீன்பிடி போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் மக்களுடைய இடர்பாடுகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேட்டறிந்தார்.

குறிப்பாக குமுழமுனை நாகதம்பிரான் ஆலய சந்தியில் இருந்து, ஆண்டான்குளம் ஐயனார் கோவில் வரையிலான வீதி மற்றும், குறித்த வீதியில் இருக்கும் இரண்டு பாலங்கள் சீரின்றிக் காணப்படுகின்றன.

அத்தோடு ஆண்டான்குளத்தில் இருந்து நித்தகைக்குளம் வரையிலான வீதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பெரியவெளி, ஆத்தங்கடவை, ஆண்டான்குளம், விண்ணாங்கம் வெளி, நித்தகைக்குளம், ஆலடிக்குளம், படலைக்கல்லு, திருக்கோணம்வயல், பூவரசம்வெளி ஆகிய வயல் நிலங்களில் சுமார் 2000 ஏக்கருக்கும்மேல் நெற்பயிற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக விவசாயத்துக்கான உள்ளீடுகளைக் கொண்டு செல்லும் போதும், வயல் காவலுக்குச் செல்லும் போதும், அறுவடையின் பின்னர் நெல்லைக் கொண்டு வருவதிலும் விவசாயிகள் பலத்த போக்குவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அதேபோல் அப்பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்களும், நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள்ளும் இவ்வாறான போக்குவரத்துச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த வீதிகளையும், பாலங்களையும் சீரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்தப் பகுதி மக்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆண்டான்குளம் பகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அவர்களது மீள்குடியேற்றம் தொடர்பிலும் தம்மால் கூடிய கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

# ஜனவரி திருமணமாக இருந்த இளைஞன் விபத்தில் உயிரிழப்பு

மிகிந்தலையில் இருந்து அநுராதபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் என்று விசாரணை மேற் கொள்ளும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இதன்போது அநுராதபுரத்தில் இருந்து மிகிந்தலை நோக்கி சொகுசு ஜீப் ஒன்றில் பயணித்தவர்கள், பலத்த காயங்களுக்கு உள்ளான அந்த இளைஞனை அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கான அனுமதித்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்தவர் ஜீப் வண்டியுடன் மோதினாரா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மிகிந்தலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சந்திரசிறி ரஞ்சித்தின் பணிப்புரையின் பேரில் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் குழு விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அடுத்தமாதம் இவருக்குத் திருமணமாகவிருந்த நிலையில் அவர் விபத்தில் உயிரிழந்துள்ளார் என்றும் இது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வைத்தியர்களின் பாதுகாப்பின்மை மேலும் வலுவடைந்து வருகின்றது!

## வைத்தியர்கள் வெளியேற்றம் அதிகரிக்க வாய்ப்பு என்றும் வைத்திய தொழிற்சங்க ஒன்றியம் சுட்டிக்காட்டு

வைத்தியர்களுக்கான பாதுகாப்பின்மை வலுவடைந்துள்ளது என்று வைத்திய தொழிற்சங்க ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலைமை நீடித்தால் நாட்டில் மீண்டும் வைத்தியர்களின் வெளியேற்றம் கடுமையாக அதிகரிக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைத்திய மற்றும் சிவில் உரிமை தொடர்பான வைத்திய தொழிற் சங்க ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் ஜீ.ஜீ.சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

வைத்தியர்களின் சம்பளப் பிரச்சினை குறித்து நேற்று புதன்கிழமை (11) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வைத்தியர்களுக்கான சம்பளம், மேலதிக கொடுப்பனவு மற்றும் வருமான வரி தொடர்பான பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசு நிலைபேறான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் கொள்கையைத் தயாரித்து அதனூடாக வைத்தியர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்வரும் நாள்களில் நாட்டை விட்டு வெளியேறும் கனிஷ்ட, தரம் உயர்த்தப்பட்ட மற்றும் சிரேஷ்ட வைத்தியர்களின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளை விட அதிகரிக்கக் கூடும்.

நாட்டில் கடந்த ஐந்து வருடங்களில் 2,000 வரையான வைத்தியர்கள் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நாட்டில் இருந்து வெளியேறியிருந்தார்கள்.

கனிஷ்ட வைத்தியர்கள், தரமுயர்த்தப்பட்ட வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் என சகல பிரிவுகளையும் சேர்ந்த வைத்தியர்கள் நாட்டில் இருந்து வெளியேறியிருந்தார்கள். இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 31 ஆம் திகதியும் வைத்தியத் துறையில் இருக்கும் வைத்தியர்கள் தமது வருமான வரி ஆவணங்களைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வரிகளைச் செலுத்த வேண்டியிருந்தது.

இந்தப் பின்னணியில் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பில் வைத்தியர்கள் மத்தியில் மீண்டும் கருத்துகள் வெளிப்பட ஆரம்பமாகியுள்ளன. வைத்தியர்களுக்குக் கிடைக்கும் அடிப்படைச் சம்பளம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. அநேகமாக 40,000 - 80,000 ரூபா என்ற வரையறையிலேயே அடிப்படைச் சம்பளத்தில் மாற்றம் ஏற்படுகிறது. தற்போதைய அரசின் வரி கொள்கைக்கமைய செலுத்தப்படும் சம்பளத்தில் வருமான வரி குறைப்பும் இடம்பெறுகிறது.

மீதமாகும் நிதி வங்கி சேமிப்புக் கணக்குகளில் இருந்தால் அதுவும் வருமான வரிக்கு உட்படுத்தப்படுகிறது. நிலையான கணக்குகளில் நிதி வைப்பிலிடப்பட்டிருந்தால் அதுவும் வருமான வரிக்கு உட்படுத்தப்படுகிறது. அதே போன்று, வைத்தியர் ஒருவர் செய்யும் முதலீடுகள் அதாவது காணி கொள்வனவு, வாகன கொள்வனவு அல்லது சொத்துக்களை விற்பனை செய்வது போன்ற ஒவ்வொரு செயற்பாடுகளின் போதும் வைத்தியர்கள் பெருந்தொகை நேரடி வரி செலுத்த வேண்டியுள்ளது.

இதன் காரணமாக, மாத இறுதியில் வைத்தியர்களின் சேமிப்பும் பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. வைத்தியராக பணியாற்றுவதற்கு பதிலாக வீதியிலிருந்து யாசகம் செய்தால் இதனை விட அதிகம் உழைக்கக் கூடியதாக இருக்குமென்ற நிலைப்பாட்டிலேயே வைத்தியர்கள் இருக்கிறார்கள்.

வெளிநாடுகளிலுள்ள வைத்தியர்களால் வரிப்பணம் செலுத்த முடியுமென்றால் ஏன் இலங்கையிலுள்ள வைத்தியர்களால் வரி செலுத்த முடியாது என்றும் ஒரு தரப்பினர் கருத்து வெளியிடுகிறார்கள்.

வெளிநாட்டிலுள்ள வைத்தியர்கள் 40, 50 இலட்சம் ரூபா பெருந்தொகை வரிப்பணத்தை செலுத்தியதன் பின்னர் மிகுதியாகும் பணம் அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல போதுமானதாக இருக்கும். ஆனால், இலங்கையைப் போன்ற நாட்டில் விசேட வைத்திய நிபுணருக்கும் 03 லட்சம் ரூபா வரையான அதிகபட்ச சம்பளமே கிடைக்கிறது.

இந்த நிலையில் அந்த நிதியில் அதிக தொகை பணத்தை வரியாக செலுத்தியதன் பின்னர் அவர்களின் கல்வி, சுகாதாரம், குடும்பத்தாரின் கல்வி, சுகாதாரம், சமூக செயற்பாடுகள், போக்குவரத்து என்ற சகல செலவுகளின் அடிப்படையில் அவர்களுக்கு நிதி மீதமாவதில்லை. அதன் காரணமாகவே இந்த நாட்டில் இருப்பதா இல்லை என்று சிந்திக்க ஆரம்பித்துள்ளார்கள்.

தற்போதும் கிராமிய வைத்தியசாலை கட்டமைப்பு, ஹம்பாந்தோட்டை, கராப்பிட்டி, கண்டி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் பேருவளை போன்ற பிரதேசங்களிலுள்ள அரச வைத்தியசாலைகளை முன்னெடுத்துச் செல்லுமளவுக்கு போதிய எண்ணிக்கையிலான வைத்தியர்கள் இல்லாத நிலைமை நிலவுகிறது.

அந்த நிலைமை மேலும் தீவிரமடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த அரசில் 20 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் பல்வேறு பதவிகளை வகிப்பதால், வைத்தியர்கள் தொடர்பில் நிலவும் பாதுகாப்பற்ற நிலைமை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.- என்றார்.

# 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் சிகரட்டுகளுடன் ஒருவர் கைது!

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் இன்று வியாழக்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் டுபாயில் இருந்து இன்று அதிகாலை 12.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர், சந்தேகநபர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளில் இருந்து 27,000 வெளிநாட்டு சிகரட்டுகள் அடங்கிய 135 சிகரட்டு காட்டுன்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு விமான நிலைய பொலிஸார் அவருக்குத் தெரிவித்துள்ளனர்.



# தந்தை வெட்டிய மரக்கிளை விழுந்ததில் உயிரிழந்த மகன்

இரத்தினபுரி – கொடகவெல பகுதியில் மரக்கிளை ஒன்று விழுந்ததில் 13 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

நேற்று (11) பிற்பகல் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவனின் தந்தையும் மற்றுமொரு நபரும் இணைந்து பலா மரம் ஒன்றை வெட்டிக் கொண்டிருந்த போது, மரத்தின் கிளையொன்று அருகில் இருந்த சிறுவனின் தலையில் விழுந்துள்ளது.

இதன்போது படுகாயமடைந்த சிறுவன் பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடகவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தெற்கு அதிவேக வீதியில் விபத்து: ஒருவர் உயிரிழப்பு; மூவர் காயம்!



தெற்கு அதிவேக வீதியில் 100 ஆவது மைல்கல் அருகில் நேற்று புதன்கிழமை (11) இரவு இடம்பெற்ற விபத்தில் 10 வயது மகள் உயிரிழந்துள்ளதுடன் தாய், தந்தை, மற்றுமொரு மகள் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவையில் இருந்து பயணித்த கார் ஒன்று முன்னால் பயணித்த லொறி ஒன்றின் பின் புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது காரில் பயணித்த தாய் , தந்தை மற்றும் இரு மகள்களும் படுகாயமடைந்துள்ள நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் 10 வயதுடைய மகள் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த 10 வயதுடைய சிறுமியே உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# 2 கிலோ ஐஸ் போதைப் பொருளை பஸ்ஸில் கொண்டு சென்றவர் கைது!

வனத்தமுல்ல பகுதியில் 2 கிலோ ஐஸ் போதைப் பொருளை மரக்கறிப் பைக்குள் ஒழித்து பஸ்ஸில் ஏற்றிச் சென்ற நபரை கைது செய்துள்ளனர் என்று பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லேரியாவைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜானக விதானகேவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பொரளை பொலிஸ் விசேட குழுவால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குறிப்பிட்ட இடங்களுக்கு ஐஸ் போதைப் பொருள் கடத்தும் நபர் எனவும், யாருக்கும் சந்தேகம் வராத வகையில் ஐஸ் போதைப் பொருளை மரக்கறி பையில் வைத்து போதைப் பொருளை கடத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# மரக்கறிகளின் விலைகள் நுவரெலியாவில் உயர்வு!

(மஸ்கெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் கறி மிளகாய், பச்சை மிளகாய், பீன்ஸ் மற்றும் எலுமிச்சம்பழம் ஆகியவற்றின் விலைகள் மேலும் அதிகரித்துள்ளன. ஏனைய மரக்கறிகளின் விலைகளும் வழமையை விட அதிகரித்துள்ளன.

மிளகாய் 900 முதல் 1000 ரூபாவாகவும், பச்சை மிளகாய் 1000 முதல் 1200 ரூபாவாகவும், மொச்சை 800 முதல் 900 ரூபாவாகவும், மூட்டை கொச்சி காய் 2800 முதல் 3000 ரூபாவாகவும் விலை அதிகரித்துள்ளது.

இந்த விலை உயர்வால் இந்த பகுதியில் உள்ள வாடிக்கையாளர்கள் பெரும் சிரமத்தில் உள்ளனர் என்று கூறுகின்றனர்.

இந்த நிலைமைகள் குறித்து நகரத்தில் உள்ள பல காய்கறி வியாபாரிகள் நடத்திய விசாரணையில், ஒவ்வொரு ஆண்டும் இந்த நேரத்தில் காய்கறிகளின் விலை மிகவும் அதிகரித்து வருகிறது.

காய்கறி பயிர்கள் அழிந்து வருவதால் மற்ற ஆண்டுகளை விட காய்கறிகளின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் பெய்த கனமழை காரணமாக நத்தார் பண்டிகை நெருங்கும் போது இந்த மரக்கறிகளின் விலை மேலும் உயரும் அபாயம் உள்ளது என்றும் வியாபாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# தரமற்ற பொருள்கள் விற்பனையில்; கொழும்பு மாநகர சபை நடவடிக்கை!

## மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

பண்டிகை காலத்தை அடிப்படையாக வைத்து, வாடிக்கையாளர்களை ஏமாற்றி, தரமற்ற உணவுப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்களை விற்பனை செய்யும் வகையில், சில மோசடி விற்பனையாளர்கள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். இந்த விடயங்களில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கடைகளில் கொழும்பு மாநகர சபையால் விசேட பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அங்கு சட்டத்தை மீறிய 11 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு கொழும்பு மாநகர சபையின் பொது சுகாதார பரிசோதகர்களால் கொழும்பு புறக்கோட்டை பகுதியில் விசேட சுற்றிவளைப்பு வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அங்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் உலர் பழங்கள் விற்பனை செய்யும் 178 மொத்த விற்பனை நிலையங்களில் சிறப்பு சோதனை நடத்தப்பட்டது.

இந்த ஆய்வுகளின் போது, கொழும்பு 4 ஆம் குறுக்குத் தெரு உள்ளிட்ட பகுதிகளில் 250 கிலோவுக்கும் அதிகமான உலர் பழங்கள் மனித பாவனைக்குத் தகுதியற்றவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

பொது சுகாதாரப் பரிசோதகர்களால் அதிகளவிலான மரக்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் என்பன மனித பாவனைக்கு தகுதியற்றவை என கண்டறியப்பட்டுள்ளது.

சுகாதார பரிசோதகர்களால் இவ்வாறு மீட்கப்பட்ட முட்டைகள், காய்கறிகள், பழங்கள் என்பன அழிக்கப்பட்டன.

தரமற்ற உணவுப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்களை மக்களுக்கு விற்பனை செய்து மோசடி செய்த கடை உரிமையாளர்கள், வர்த்தகர்கள் உட்பட 11 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர் என்றும் கொழும்பு பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# குடும்ப உறவுப்பாலம் தொலைபேசியால் விரிசலாகிறதா?

**ரம்மியா புஸ்பாகரன்,**
2 ஆம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒற்றைத் தொலைபேசி ஊடாக உலகத்தின் எந்த மூலையில் என்ன நடந்தாலும் பார்த்து அறிந்து கொள்ள முடிகின்றது என்பதால்தான் தொலைபேசியையே உலகமாக நினைத்து விட்டனரோ என்று தான் புரியவில்லை. தொழில் நுட்ப வளர்ச்சியைக் கண்டு ஒரு கணம் பெருமிதம் கொண்டாலும், மறுகணமே அதன் வளர்ச்சி ஏன் வந்தது என்று நினைக்குமளவுக்கு அதன் விந்தைகள் சற்று ஆழ்ந்து சிந்திக்க வைத்துள்ளன.

கூட்டாக இருந்து கூடிச் சிரித்து மகிழ்ந்த காலம் மாறி, பரபரப்பாக ஓடித் திரிந்து பின்னர் நான்கு சுவருக்குள் வந்து முடங்கி இருக்கும் வாழ்க்கைக்கு வித்துட்டிருக்கின்றது. வீட்டிடுக்கு வந்த பின்னரும் உறவுகளோடு ஆறுதல் வார்த்தைகள் பேசி அமர்ந்திருக்காமல் தொலைபேசி மீதான நாட்டமே வார்த்தைகளை மட்டுப்படுத்தியிருக்கின்றது.




சின்னஞ் சிறார்கள் முதல் முதியவர்கள்வரை அனைவரது கையிலும் தொலைபேசியானது ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. காலை எழுந்தது முதல் இரவு நித்திரைக்கு செல்லும்வரை தொலைபேசி இல்லாமல் இருப்பது அதிகளவானோருக்கு என்னவோ உயிர் இல்லாத உடலைப் போல இருக்கின்றது. காலை எழுந்தவுடன் வீட்டில் இருப்பவர்களோடு அந்தநாளைத் தொடங்குவதையும் தாண்டி தொலைபேசியோடு அந்த நாளைத் தொடங்கினால் மாத்திரமே அவர்களுக்கு அது விடியலாக அமைகின்றது.

வீட்டில் எண்ணிக்கையைச் சேர்ப்பதற்காக மட்டுமே வீட்டினுடைய நபர்களாக இருக்கின்றனர். பொதுவாக எல்லோரது வீட்டிலும் தொலைபேசி ஒரு நபராகவே மாறி இருக்கின்றது. ஒருவர் தொலைபேசியோடு விழுந்தால் அந்த நபருக்கு ஏதாவது நடந்திருக்குமா? என்று விசாரிப்பதைக் காட்டிலும் தொலைபேசிக்கு ஏதேனும் நடந்து விட்டதா? என்று பதறி அடித்தபடி கேட்கும் அளவுக்கு தொலைபேசி மீது உள்ள அக்கறை ஒரு நபர்மீது இருப்பதில்லை என்பதை நினைக்கையில்தான் சற்று வேதனையளிக்கின்றது.

கூட்டுக் குடும்பமாயினும் சரி, கருக்குடும்பமாயினும் சரி எல்லைகளைத் தாண்டிக் கதைத்து மகிழ்ந்து நினைவுகளைப் பொக்கிஷமாகச் சேமித்த அந்த அழகிய நாள்கள் எல்லாம் இன்று தொலைபேசிப் பாவனை அதிகரித்தமையால் சற்று மழுங்கடிக்கப்பட்டதை யாராலும் மறுத்து விட முடியாது.

ஒரே வீட்டில் இருந்து கொண்டு உணவருந்த அழைப்பதற்குக் கூடதொலைபேசி அழைப்பின் மூலமே வீட்டில் இருப்பவர்களை அழைக்கின்ற நிலைமை வந்துள்ளது. முன்னைய காலங்களில் எல்லாம் தொலைபேசி இல்லாமல் இருந்த நிலைமையில் மகிழ்ச்சியான வாழ்க்கைக்குப் பஞ்சமே இருந்ததில்லை எனலாம். விட்டுக் கொடுத்தலும், புரிந்துணர்வும், ஒரு பிரச்சினை வந்தால் அதனைத் தீர்த்துக் கொள்ளும் பக்குவமும் அவர்களிடம் தாராளமாகவே இருந்தது.



இன்றைய காலச் சூழலில் பெரும்பாலும் வருகின்ற பிரச்சினைகள் எல்லாமே தொலைபேசியின் ஊடாகத்தான் வருகின்றன. குடும்ப நிலை பிளவுண்டு காணப்படுவதற்கும் அது முக்கியமான காரணியாக உருவெடுத்து இருக்கின்றது. ஒருவரது பிறந்த தினத்தைக் கூட இன்றைய அளவில் தொலைபேசி தான் ஞாபகப்படுத்துகின்றது. வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமைக்கு மனித சமூகமானது மாறி இருக்கின்றது.

உணவை அருந்தும் பொழுதாவது அந்தத் தொலைபேசியை மறந்து இருக்க முடியவில்லை.கணவன் மனைவி உறவுக்கு இடையிலான சண்டை, சந்தேகம் என்பன தோன்றுவதற்கான மூலாதாரமாகத் தொலைபேசியை காணப்படுகின்றது. தொலைபேசி மீது உள்ள நாட்டத்தினால் வீட்டில் இருப்பவர்களைக் கூடச் சரியாகக் கவனித்துக் கொள்ள முடிவதில்லை.இதனால் பிள்ளைகளின் கல்வி நிலை பாதிப்படைவதையும் காணலாம்.

ஆக மொத்தத்தில் விரிசலை நோக்கிய பயணமாகவே குடும்பத்தின் உறவு நிலை தொலைபேசியால் மாற்றப்பட்டுள்ளது. கணவன் – மனைவி யாராவது ஒருவர் தொலைபேசி மூலமாக வேறு ஒரு தொடர்பு கிடைக்கும் பொழுது அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்லும் பொழுது அது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்குகின்றது.

உலகளாவிய ரீதியில் இதைப் பற்றிய பல செய்திகளை நாம் அறிந்திருப்போம். நாளை நமக்கும் அந்த நிலை வந்து விடமாட்டாது என்று நிச்சயமாகக் கூறி விட முடியாது. எதுவாயினும் வருமுன் காப்பதே சாலச் சிறந்தது. இன்றைய காலச் சூழலில் தனித்தனியே வசித்துக் கொள்ள அறைகள் இருக்கும் அதே வேளை தனித்தனி நபருக்கு என்றும் தொலைபேசி இருப்பதால் அவரவர் வேலைகளை அவரவர்களே பார்த்தபடி கடந்து செல்கையிலே உதவிக்காக மற்றொருவரை அழைப்பதையும், மற்றவரின் நலனில் அக்கறை செலுத்துவதையும் மறந்து விட்டனர்.

ஒரே அறையில் அமர்ந்து இருந்தாலும் மாறி மாறி தொலைபேசியைப் பார்த்த படியே அமர்ந்து இருக்கின்றனர். அங்கு வார்த்தைகளுக்கு இடமில்லாமல் தொலைபேசி மீது உள்ள மோகமே ஊமையாக்கியுள்ளது. பெற்றோர்களுக்கிடையான உறவாயினும் சரி, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு இடையேயான உறவாயினும் சரி சரியான உறவுப் பாலம் தொலைபேசி என்ற உறவு வந்தமையால் கேள்விக்குறியாகி நிற்கின்றது. உண்மையான அன்பு, அக்கறை எல்லாம் வெகு தூரம் சென்று விட்டது.

வீட்டில் உறவுகள் ஒட்டி இருந்ததை தொலைபேசியானது மென்மேலும் விரிசலாக்கி இருக்கின்றது. இதனால் உறவுகளுக்கு இடையே இருந்த தனிமை மேலும் தனிமை ஆக்கப்பட்டுள்ளது. ஆறுதலுக்கு ஒரு நபர் இருக்கின்றார் என்பது அங்கு நபர் அல்ல மாறாக அது "தொலைபேசியே" எனலாம். இவ்வாறான நிலையில் அதன் பாவனையைக் குறைத்துக் கொள்ளும் பொழுது அது எம்மை நல்லதோர் பாதைக்கு வழி நடத்திச் செல்லும்.



# வேலையற்ற பட்டதாரிகளுக்கான தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை

## அஷ்ரப் தாஹிர் எம்.பி. தெரிவிப்பு

(எஸ். சினீஸ் கான்)

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிருக்கும் இடையிலான சந்திப்பொன்று ஒலுவில் க்ரீன் வில்லா வளாகத்தில் இடம்பெற்றது.

இதன் போது பட்டதாரிகள், அரச தொழில் வாய்ப்பின்றி எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அந்த அமைப்பால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பிலான தகவல்கள், அரச தொழில் தொடர்பான தகவல்கள் மற்றும் பட்டதாரிகளுக்கான மாற்று தொழில் வழிகாட்டல்கள் தொடர்பிலும் முழுமையான தகவல்களை கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், இது விடயம் தொடர்பில் பட்டதாரிகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான சகல முஸ்தீபுகளையும் தான் மேற்கொள்வார் என்று தெரிவித்துள்ளார்.



# கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவ பொருள் பொதிகள்

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் ஒன்றான சாய்ந்தமருது வொலிவேரியன் கிராம கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவத்துக்குத் தேவையான பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இன்று இடம்பெற்றது.

கண்டி மனிதாபிமான அமைப்பின் அனுசரணையுடன் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதனின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆஷிக், கண்டி மனிதாபிமான அமைப்பின் பிரதிநிதிகளான திருமதி ராஷிதா, எம். என். எம். நௌஷாத், பொதுச் சுகாதார தாதிய சகோதரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொது சுகாதார மருத்துவ மாது, பொதுச் சுகாதார மருத்துவ மாது க்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

கண்டி மனிதாபிமான அமைப்பின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 25 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தேவையான பிரசவ பொதிகள் கையளிக்கப்பட்டன. அவர்களுக்கு தேவையான ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்வும் இடம்பெற்றது.



# 216 கிலோ கேரள கஞ்சாவுடன் காரைநகரில் இரண்டு பேர் கைது!

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

216 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

51 ஆவது படைப்பிரிவு இராணுவ முகாமைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, காரைநகர் பகுதியில் வைத்து சாவகச்சேரி, மீசாலை பகுதியைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் இந்தக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக் கையின் போது 216 கிலோகிராம் எடையுடைய கேரள கஞ்சா மற்றும் ஒரு படகு என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சான்றுப் பொருள்களுடன் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








# முல்லைத்தீவுக்கு வெள்ள நிவாரண உதவி வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

## 4 லட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கல்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட செய்யப்பட்ட 165 குடும்பங்களுக்கு 4 லட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த மாவட்டத்தில் உள்ள வற்றாப்பளை, முள்ளியவளை, கோப்பாப்பிலவு, ஐயனார் குடியிருப்பு, விஸ்வமடு, ரெட்பானா ஆகிய 6 கிராமங்களில் இருந்து தெரிவானவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வற்றாப்பளையில் வைத்து நேற்று புதன்கிழமை சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலாசுரபி செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர் குழுவினர் அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொண்ட நிவாரணப் பொதிகளை வழங்கினர்.







# பாரதியார் படைப்புகளை வெளியிட்டார் மோடி: தமிழ் மொழியின் பொக்கிஷம் என்று புகழாரம்




தமிழ் மொழியின் பொக்கிஷமாக பாரதியார் நூல்கள் அமைந்துள்ளன என்று பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டினார். டில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பாரதியாரின் படைப்புகள் அடங்கிய 23 பாகங்களை பிரதமர் வெளியிட்டார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் 143 ஆவது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி தேசியக் கவி பாரதியாரின் முழுமையான படைப்பு நூல்களின் தொகுப்பை 23 பாகங்களாக பிரதமர் நரேந்திர மோடி டில்லியில் நேற்று வெளியிட்டார்.

மத்திய கலாச்சாரத் துறையின் கீழ் அமைந்துள்ள சாகித்ய அகாடமி சார்பில் பிரதமரின் அரசு இல்லத்தில் இதற்கான நிகழ்ச்சி நேற்று கோலாகலமாக நடைபெற்றது. கால வரிசையில் பாரதி படைப்புகள் என்ற பெயரில் தமிழில் வெளியிடப்பட்ட இந்நூல்களை சீனி விசுவ நாதன் தொகுத்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவாத், நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகையில்.

"மகா கவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்தநாளை நாடு இன்று கொண்டாடுகிறது. நான் அவரை பயபக்தியுடன் வணங்குகிறேன். அவரது மரபுக்கு எனது இதயப்பூர்வமான அஞ்சலியை செலுத்துகிறேன்.

மகாகவி சுப்ரமணிய பாரதியின் படைப்புகள் வெளிவருவது என்பது அவருக்கு குறிப்பிடத்தக்க மரியாதையை அளிப்பதாகும். நாட்டின் தேவைகளை மனதில் கொண்டு பாடுபட்ட சிறந்த சிந்தனையாளர் சுப்ரமணிய பாரதி. அவருடைய பார்வை மிகவும் விசாலமானது. அந்த கால கட்டத்தில் நாட்டுக்குத் தேவையான அனைத்து திசைகளிலும் அவர் பணியாற்றினார்.

மகா கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரின் படைப்புகளை வெளியிடுவதில் நான் பெருமை கொள்கிறேன். பாரதியார் தமிழகத்தின், தமிழ் மொழியின் பாரம்பரியம் மட்டுமல்ல, அவர் தனது ஒவ்வொரு மூச்சையும் அன்னை பாரதத்தின் சேவைக்காக அர்ப்பணித்த சிந்தனையாளர்.

நம் நாட்டில், வார்த்தைகள் வெறும் வெளிப்பாடாக மட்டும் இல்லாமல், ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. வார்த்தைகளின் எல்லையற்ற ஆற்றலைப் பொக்கிஷமாகக் கருதும் கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள் நாம். அதனால்தான் நம் ஞானிகளின் வார்த்தைகள் அவர்களின் எண்ணங்கள் மட்டுமல்ல, அவர்களின் சிந்தனை, அனுபவம் மற்றும் ஆன்மீக பயிற்சியின் சாறாக அமைந்துள்ளன.

சுப்ரமணிய பாரதி போன்ற ஆளுமை நூற்றாண்டுக்கு ஒருமுறை கிடைக்கக்கூடியது. அவருடைய சிந்தனை, புத்திசாலித்தனம், பல பரிமாண ஆளுமை ஆகியவை நம் அனைவரையும் ஆச்சரியப்படுத்துகிறது. அவரது எண்ணங்கள், சிந்தனைகள் நம் எல்லோரையும் ஊக்குவிக்கிறது. அவரை நோக்கி ஈர்க்கின்றன. தமிழ் மொழியின் பொக்கிஷமாக தேசியக் கவிஞர் பாரதியாரின் நூல்கள் அமைந்துள்ளன. பாரதியாரின் படைப்புகள் இன்றும் கூட நம்மை ஊக்குவிக்கின்றன.

காசி என்று அழைக்கப்படும் வாராணசிக்கும், பாரதிக்கும் அதிக தொடர்புண்டு. தனது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக வாராணசிக்கு பாரதியார் வந்தார். பின்னர் காசியிலேயே சில காலம் பாரதி தங்கியிருந்தார். காசிக்குப் பெருமை சேர்த்தவர் பாரதி." – என்றார்.

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு கேரளாவில் உற்சாக வரவேற்பு



வைக்கத்தில் இன்று நடைபெறும் பெரியார் நினைவக திறப்பு விழாவுக்காக கேரளா சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, அமைச்சர்கள், தி.மு.கவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

1924 இல் கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில் நடைபெற்ற கோயில் நுழைவு போராட்டத்தில் தமிழகத்தில் இருந்து பெரியார் கலந்து கொண்டார். வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழா தற்போது கொண்டாடப்படுகிறது.

அப்போராட்டத்தை நினைவுகூரும் விதமாக, தந்தை பெரியாருக்கு வைக்கத்தில் சிலை அமைக்கப்பட்டு 1994 ஆம் ஆண்டு நினைவகம் திறக்கப்பட்டது. அந்த நினைவகம் பழமையாக மாறியதால், முதல்வர் மு.க.ஸ்டாலின் 8.14 கோடி ரூபாவில் நினைவகத்தை சீரமைக்க உத்தரவிட்டார். அதன்படி, சீரமைப்பு பணி நிறைவடைந்துள்ளது.

இதில், பெரியார் சிலை, பெரியார் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் புகைப்படங்கள் அடங்கிய நிரந்தர கண்காட்சிக் கூடம், நூலகம், பார்வையாளர்கள் மாடம், சிறுவர் பூங்கா உள்ளிட்டவை அமைந்துள்ளன.

இந்நிலையில், பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை முதல்வர்ஸ்டாலின் இன்று திறக்கிறார். இதற்காக நேற்று காலை சென்னையில் இருந்து புறப்பட்டு, கொச்சியில் உள்ள நெடும்பாசேரி விமான நிலையத்தை சென்றடைந்தார். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து, கோட்டயம் சென்றார். அங்கு முதல்வரை அமைச்சர்கள் எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், கேரள திமுகவினர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

வைக்கத்தில் இன்று நடைபெறும் விழாவுக்கு, கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையேற்கிறார்.





# தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஆப்கானிஸ்தான் அமைச்சர் பலி

தலைநகர் காபூலில் நேற்று புதன் கிழமை நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அகதிகளுக்கான ஆப்கானிஸ்தானின் அமைச்சர் கலீல் ஹக்கானி கொல்லப்பட்டுள்ளார் என அந்நாட்டின் தலிபான் ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹக்கானி தனது அலுவலகத்தை விட்டு வெளியேறும் போது, நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் மேலும் 6 பேர் உயிரிழந்தனர் என உள்துறை அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இவர், ஹக்கானி நெட்வொர்க் என்று அழைக்கப்படும் தலிபானின் சக்தி வாய்ந்த பிரிவின் முக்கிய உறுப்பினராக இருந்தார், மேலும் அவர் அமெரிக்காவால் உலகளாவிய பயங்கரவாதியாக அடையாளம் காணப்பட்டார்.

இந்த தாக்குதலுக்கு, இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) அமைப்பு பொறுப்பேற்றது.

அதேநேரம், ஹக்கானி ஐ.எஸ். அமைப்பின் தாக்குதலால் கொல்லப்பட்டதை தலிபான் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தினார் என ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கலீல் ஹக்கானியின் சகோதரர் ஜலாலுதீன் 1980 களில் ஆப்கானிஸ்தானில் சோவியத் படையினருடன் போரிட்ட புகழ்பெற்ற கெரில்லா தலைவர் ஆவார்.

மேலும் தலிபான்களின் 20 ஆண்டு கால கிளர்ச்சியின் போது பல தாக்குதல்களுக்குப் பின்னால் ஹக்கானி வலையமைப்பை நிறுவினார்.

2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு படைகள் முழுவதுமாக திரும்பப் பெறப்பட்டதன் மூலம் தலிபான்கள் முழுமையான கட்டுப்பாட்டைப் பெற்றதிலிருந்து ஆப்கானிஸ்தானில் ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைமை மேம்பட்டுள்ளது.

எனினும், ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் பல குண்டுவெடிப்புகள் மற்றும் தற்கொலைத் தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றமையும் குறிப்படத்தக்கது.





# சிரியாவில் மக்களின் வாழ்க்கை வழமைக்கு திரும்பியுள்ளது

சிரியாவின் தலைநகரில் மக்களின் வாழ்க்கை வழமைக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு மக்கள் தமது தொழில்களுக்குத் திரும்பியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன், சிரிய தலைநகரில் உள்ள தமது தூதரகத்தை மீண்டும் திறக்கவுள்ளதாகக் கட்டார் அறிவித்துள்ளது.







பக்கங்கள் 03

கனடா முரசு


வியாழக்கிழமை 12/12/2024

## கனடா எல்லைப் பகுதிகளில் போதைப்பொருள் மீட்பு

கனடாவின் எல்லை பகுதி ஒன்றில் சுமார் 1500 கிலோ கிராம் கொக்குய்ன் போதை பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த இடத்தில் இருந்து பெருந்தொகை 02




# கனடாவில் தபால் பணியாளர்களின் தொழிற்சங்க போராட்டம் தொடர்கிறது

**கனடாவில் தபால் ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டம் தொடர்கின்றது. சுமார் மூன்று வாரங்களுக்கு மேலாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.**

**தொழிற்சங்கங்களுக்கும் கனடிய போஸ்ட் நிறுவனத்திற்கும் இடையில் எந்த இணக்கப்பாடும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

பணியாளர்கள் ஒரு படி பின்வாங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பண்டிகை காலத்தில் தபால் ஊழியர்களின் பணி புறக்கணிப்பு போராட்டம் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.





# கனடாவுக்கு செல்ல வேண்டாம்: ரஷ்யர்களுக்கு எச்சரிக்கை விடுப்பு

ரஷ்ய நாட்டு மக்களை அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு செல்லவேண்டாம் என திடீர் எச்சரிக்கை விடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா, கனடா மட்டுமின்றி சில ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணப்பட வேண்டாம் என்றும் அமெரிக்க அதிகாரிகளால் ரஷ்ய மக்கள் வேட்டையாடப்படும் ஆபத்து இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரான மரியா ஐகரோவா இது தொடர்பில் தெரிவிக்கையில், அமெரிக்காவுடனான உறவுகள் முறிவின் விளிம்பில் தத்தளிப்பதாக தெரிவித்துள்ளார்.



இது முற்றிலும் அமெரிக்க நிர்வாகத்தின் தவறு என குறிப்பிட்டுள்ள அவர், இந்த நெருக்கடியான சூழலில் ரஷ்ய மக்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது உத்தியோகப்பூர்வமாகவோ அமெரிக்காவுக்கு பயணிப்பது என்பது ஆபத்தை வரவழைக்கும் செயல் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கா மட்டுமின்றி, அதன் நெருக்கமான நட்பு நாடுகளான கனடா மற்றும் குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகளுக்கும் ரஷ்ய மக்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என வலியுறுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.



# இறக்குமதி செய்யும் பொருள்கள் மீது வரி விதித்தால் ட்ரம்புக்கு தக்க பதிலடி

## கனடா பிரதமர் ட்ரூடோ தெரிவிப்பு

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மீது விதிக்கப்பட இருக்கும் வரியால், அந்தப் பொருள்களின் விலை அதிகரிக்கும் என்பதை அமெரிக்கர்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்கள் மீது அமெரிக்கா வரி விதிக்குமானால், அமெரிக்காவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் எனவும் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ட்ரம்ப், தான் ஜனாதிபதியாக பதவியேற்றதும், கையெழுத்திடும் முதல் ஆவணங்களில் ஒன்று, கனடா, மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 சதவிகித வரி விதிப்பது தொடர்பானதுதான் என்று கூறியிருக்கிறார்.

இந்த நிலையில், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது 25 சதவிகித வரி விதிக்கப்படுமானால், அது கனடாவின் பொருளாதாரத்தைக் கடுமையாக பாதிக்கும் என்பதை மறுக்கமுடியாது என்று கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ கூறியுள்ளார்.

அதே நேரத்தில், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது ட்ரம்ப் வரி விதிப்பாரானால், அந்தப் பொருள்களின் விலை கணிசமாக அதிகரிக்கும் என்னும் உண்மையை அமெரிக்கர்கள் உணரத் தொடங்கியுள்ளனர் எனவும் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஸ்டீல் மற்றும் அலுமினியத்துக்காக கனடாவைத்தான் சார்ந்துள்ளது.

அத்துடன், அமெரிக்கா தனது கச்சா எண்ணெய் தேவையில் 65 சதவிகிதத்தையும், குறிப்பிடத்தக்க அளவிலான மின்சாரத்தையும், கனடாவிலிருந்துதான் இறக்குமதி செய்கிறது. கனடாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மொத்த இயற்கை எரிவாயுவும் அமெரிக்காவுக்குத்தான் செல்கிறது.

வேளாண்மைக்கான பொருள்களையும் கனடா அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கிறது.

ஆக, கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இத்தனை பொருள்கள் மீதும் அமெரிக்கா 25 சதவிகித வரி விதிக்குமானால், அமெரிக்காவில், அவை அனைத்தின் விலையும் கணிசமாக அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

அட்லாண்டிக் பிராந்திய பகுதியில் இவ்வாறு ஆயுதங்களும் போதை பொருளும் இந்த ஆண்டு மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பகுதியில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையில் 270 ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் சுமார் 500 கிலோ கிராம் எடையுடைய கஞ்சாப் போதை பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் களவாடப்பட்ட 132 வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கனடிய எல்லைப் பகுதிகளில் பெரும் எண்ணிகையிலான பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# கனடாவின் ரொறன்ரோவில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை

கனடா - ரொறன்ரோவில் மருத்துவர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலைமை உருவாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக குடும்ப நல மருத்துவ துறையில் இவ்வாறு மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குடும்பநல மருத்துவத்துறைக்கு போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, புதிதாக மருத்துவத் துறையில் இணைந்து கொள்ளும் மருத்துவர்களும் குடும்பநல மருத்துவத்துறையை தெரிவு செய்வதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவர்களுக்கு உரிய சலுகைகள் வழங்கப்படுவதில்லை எனவும் இதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஆயுதங்களுடன் தமிழ் தம்பதி கைது

கனடாவில் ஆயுதங்களுடன் தமிழ் தம்பதி ஒன்று கைது செய்யப்பட்டுள்ளதாக ரொறன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரொறன்ரோவை சேர்ந்த இளம் தம்பதிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரொறன்ரோவை சேர்ந்த 37 வயதான தனராஜ் தங்கராஜா மற்றும் 37 வயதான கிஷானி பாலச் சந்திரன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

37 வயதான கணவன் மீது மீது 8 குற்றச்சாட்டுகளும், மனைவி மீது 3 குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளதாக ரொறன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி மார்க்கம் வீதி மற்றும் ஷெப்பர்ட் அவென்யூ பகுதியில் பொலிஸார் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த போது இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகத்திற்கிடமான வாகனம் ஒன்றை சோதனை செய்த போது தம்பதிகள் சிக்கியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.